1975 ஏப்ரல் 8]

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, இப்போது உணவு தானியங்களை விநியோகிக்கிற கடைகளில் ஆயிரம் கார்டுகளுக்கு மேல் இரண்டாயிரம் கார்டுகளுக்கு விநியோகம் செய்வது சிரமமாக இருக்கிறது. வாங்குகிற வர்களுக்கும் சிரமமாக இருக்கிறது. இந்த முறையை மாற்றி இப்படி விநியோகிக்கிற கடைகளுக்கு 500 கார்டுகளுக்கு அதிகப்படாமல் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, ஏற்கெனவே இந்தக் கடைகளுக்கு 5 ஆயிரம்வரை கார்டுகள் இருந்தது. அண்மையில் எடுத்த முடிவின்படி குறைந்தபட்சம் 2 ஆயிரத்துக்கும் கீழே இருக்க வேண்டுமென்று முடிவு செய்தோம். இதிலுள்ள பிரச்சினை என்ன வென்றால் கார்டுகள் இரண்டாயிரத்திற்கும் கீழே போகும்போது அந்தக் கடையின் செலவிற்கு கட்டுபடியாகாது. அது வையபிள் யூனிட்டாக இருக் காது. பஞ்சத்தை உத்தேசித்து கிராம மக்கள் முன்வருவார்களானால் பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒத்துழைப்பு தருவார்க ளானால் இப்படிப்பட்ட பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்கலாம் என்று முடிவு செய்திருக்கிறோம்.

Sewage plant in Madras.

*590 *Q.*—Thiru N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether it is a fact that a second sewage plant is to be set up in the outskirts of Madras shortly; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி:

(அ) and (இ):

சென்னை மாநகரில் மேற்குப் புறநகர்ப் பகுதியில் கோயம்பேட்டில் கழிவு நீர் சுத்திகரிப்பு இரண்டாவது இயந்திரம் அமைக்கப்பட இருக்கிறது. இம்மாதிரி இயந்திரம் ஒன்று நேசப்பாக்கத்தில் நிறுவப்பட்டுள்ளது.

கோடம்பாக்கம், தியாகராயநகர், மேற்குப் புறநகர்ப் பகுதிகள் ஆகிய வற்றில் சேரும் கழிவு நீரை குழாய்கள் மூலம் கோயம்பேட்டிற்குக் கொண்டு செல்லும் திட்டம் முடிவடைந்துள்ளது. தொடக்கத்தில் நாளொன்றுக்கு 6 மில்லியன் காலன் கழிவு நீர் கோயம்பேட்டிற்கு கொண்டு செல்லப்படும்.

இக்கழிவு நீரை சுத்திகரிக்கும் இயந்திரத்தை ரூ.77.62 இலட்சம் செலவில் அமைக்கும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. 18 மாதங் களில் இது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திரு என். கே. பழனிசாமி : நகரம் அதிகமாக விரிந்து இருப்பதன் காரணமாக இப்போதுள்ள நிலைமையை அனுசரித்து சர்க்கார் இந்த வசதியை அதிகப்படுத்த திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : முன்பு ஒரே இடத்தில் 32 பம்பு செட்டுகளைப்போட்டு காசிமேட்டில் வேலை செய்து வந்தார்கள். இதை விரிவுபடுத்த வேண்டுமென்றுதான் இப்போது சென்னை நகரை ஐந்து மண்டலமாகப் பிரித்து—முதல் மண்டலம் 209 லட்சம், இரண்டாவது மண்டலம் 211 லட்சம், மூன்றாவது மண்டலம் 135 லட்சம், நான்காவது மண்டலம் 116 லட்சம், ஐந்தாவது மண்டலம் 278 லட்சம் என்ற அளவுக்கு திட்டமிட்டு நிதி ஒதுக்கி—முதலாவது திட்டம் முடிந்து விட்டது. இரண்டாவது திட்டம் முடிவடையும் தருவாயில் இருக்கிறது. பாக்கித் திட்டங்களும் தொடர்ந்து எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, இதில் குறிப்பிட்டுள்ள திட்டப்படி—எம்.ஜி.ஆர். நகருக்கு அப்பால் உள்ள குடிசைப் பகுதிகளை பத்தாண்டுகளுக்கு முன்பே வேறுபுறம் போகவேண்டுமென்று மாநகராட்சியும், அரசும் தெரிவித்திருந்தாலும் கூட அந்தக் குடிசைகள் இன்னமும் அகற்றப்படாமல் இருக்கின்றன. அந்தக் குடிசைகளை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஒரு குறிப்பிட்ட பகுதியிலுள்ள கேள்வி—தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துப் பதில் சொல்ல முடியும்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள்.

*591 வினா : திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும் இன்னும் சொந்தக் கல் கட்டடம் இல்லாத ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் எங்கெங்கே உள்ளன ?

(இ) கல் கட்டடம் இல்லாத ஊர்களில் அவற்றைக் கட்டி முடிக்க மேற்கொண்டுள்ள சிறப்பு நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி :

(அ) and (இ) விவர அறிக்கை @ ஒன்று சட்டப் பேரவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : தலைவர் அவர்களே, இந்த இரண்டு ஒன்றியங்களிலும் இன்னும் அதிகமான பள்ளிக்கூடங்களுக்குச் சொந்தக் கட்டிடம் இல்லாமல் இருக்கின்றன. இந்த இரண்டு ஒன்றியமும் பிற்பட்ட

@119–120–ம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.